திரு. யா. சை. மு. யூசப்: இதுபோன்று மாநிலங்களை ஒன்றாக இணைந்த லாரி பர்மிட் தரும் நேரத்தில் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் வாய்ப்பு இருக்கும் காரணத்தால் அரிசித் தடையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அதுபற்றித் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: லாரிகள் இரவு முழுவதும் ஓடுவதால் பல விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன, இரவு 12 மணிக்கு மேல் லாரிகள் ஓடக்கூடாது என்று சட்டம் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நெடுந்தூரம் செல்லுகிற சரக்கு வண்டிகளுக்கு விபத்துக்களைத் தவிர்க்கும் முகத்தான் இரண்டு ஓட்டுநர்களை அமைக்கும் முறை அமல்படுத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Bridge across Paruthi Vaikal.

*813. Q. Thiru J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to broaden the bridge across the Paruthi Vaikal on the Swamiarmadam-Mecode road in Kanyakumari district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(a) இல்லை.

(b) கேள்வி எழவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, முறையாக இது மூன்றாவது பாலம் சம்பந்தமான கேள்வி. மூன்று பாலத்திற்கும் நிதிநிலை சரியாக இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்தப் பாலம் அமைந்திருக்கின்ற ரோடு 90 டிகிரி பென்ட் ஆன இடத்திலே உள்ளது. இரு பக்கமும் 50 அடிக்கு மேல் ஆழம் இருக்கிறது. இங்கே பஸ் சர்வீசும் இருக்கிறது, அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தப் பாலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதை விஸ்தரிப்பதற்குப் பெரிய அளவு பணச் செலவுகூட இல்லை, ஆகவே மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1978 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் கைவிடப்பட்டது என்று நான் கூறுவில்லை. இந்தப் பாலம் 10 அடி அகலமே கொண்ட குறுகலான பாலம். இந்தப் பாலத்தை அகலப்படுத்துமாறு கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றம்கூட அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. 1.20 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இதை விரைந்து எடுக்க பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்தப் பாலத்தை விரிவுபடுத்துவதற்கான எஸ்டிமேட் 1968 ஆம் ஆண்டே எடுக்கப்பட்டது, செலவுகூட 1.20 இலட்சம் ரூபாய் தான் ஆகிறது. எனவே, வரும் ஆண்டுகளில் என்பதற்குப் பதிலாக அடுத்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களினுடைய கோரிக்கைப்படி வரும் ஆண்டில் இதை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

வேடப்பட்டியில் கால்நடை மருத்துவ மனை.

*814 வினு— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பேரூர் ஒன்றியம், வேடப்பட்டி பேரூராட்சியில் இயங்கி வந்த கால்நடை மருத்துவ மனை மாற்றப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) மீண்டும் அங்கு செயல்படுத்த வேண்டுமென பொது மக்கள் விண்ணப்பித்துள்ளனரா?

(ஈ) அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பேரூர் ஒன்றியத்தில் வேடப் பட்டியில் கால்நடை மருந்தகம் அல்லது மருத்துவமனை ஏதும் இதுவரை இயங்கவில்லை. அவ்விடத்தில் இயங்கி வந்த கிளை நிலையம் 7-2-1970—ல் கிளை நிலையங்கள் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் மூடப்பட்டது.

(இ) மேற்குறித்த கிளை நிலையம் செயல்பட வேண்டு மெனும் கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.